# IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, AMBASAMUDRAM.

## O.S.NO. : 74/2024

**Deposition of Witness**: Pw2

NAME : மகாதேவன், நகராட்சி ஆணையாளர்

FATHER'S NAME : பத்மநாபன்

VILLAGE : முன்னீர்பள்ளம்

TALUK : நான்குனேரி

RELIGION : இந்து

AGE : 59

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of **07.09.2026**

**முதல்விசாரணை (வாதி தரப்பில்):**

நான் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின்பேரில் நான் இன்று சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன்.

1) 2016 முதல் நாளது தேதிவரை உள்ள கேட்பு வரவு நிலுவை பதிவேடு பரமசிவன் பெயரில் உள்ளது. 2016 க்கு பின்புதான் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. **மேற்கண்ட ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதற்கு முந்தைய ஆவணங்கள் அனைத்தும் கையால் எழுதப்பட்டு பராமரித்து வந்தது. ஆனால் அந்த ஆவணங்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளது. ஆகையால் இந்த ஆவணங்கள் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.6 ஆகும். வா.சா.ஆ.5 ஆவணம் மூன்றாம் நிலை நகராட்சியாக இருந்தபோது நகராட்சி செயல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணம் ஆகும். அந்த வா.சா.ஆ.5 ஆவணத்தில் கதவு

எண்.143 இ-ஐ இடித்து, அந்த இடத்தில் வரைபடத்தில் காண்பித்தபடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1) வாதி தரப்பு சான்றாவணம் குறித்தும், கட்டிட வரைபட அனுமதி குறித்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கட்டிட வரைபட அனுமதியுடன் இணைக்கப்பட்டுள்ள செயல் அலுவலரின் நடவடிக்கைகள் நகல் ஆவணம் ஆகும், அதில் கையெழுத்து ஏதுமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வரைபடத்தில் கட்டிட விண்ணப்பதாரர் என்ற இடத்தில் கையொப்பம் ஏதும் உள்ளதா என்றால் உள்ளது. கதவு எண்.143 ஜி வரிவிதிப்பு எந்த வருடம் ஏற்படுத்தப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கதவு எண்.143 இ கட்டிடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் கதவு எண்.143 ஜி கட்டப்பட்டதா என்றால் அந்த ஆவணத்தில் கதவு எண்.143 இ-ஐ இடித்துவிட்டு அந்த இடத்தில் வரைபடத்தில் கண்டுள்ளபடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் கதவு எண்.143 ஜி என குறிப்பிடப்பட்டுள்ளது.

2) கட்டிட வரைபட அனுமதி கொடுக்கப்பட்டதாக சொல்லும் இடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தின் கதவு எண்.143 ஜி-யா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வரிவிதிப்பு பதிவேடு என்பது நிரந்தர பதிவேடு என்றால் சரிதான். முந்தைய வரிவிதிப்பு பதிவேட்டை பார்த்தால் கதவு எண்.143 ஜி ஆரம்பத்தில் யார் பெயருக்கு ஏற்பட்டது என்பது தெரியவரும் என்றால் சரிதான். அந்த வரிவிதிப்பு பதிவேடு சேதப்பட்டதா, நல்ல நிலையில் உள்ளதா என்பதை நான் உறுதி செய்தேனா என்றால் இல்லை. அவ்வாறு உறுதி செய்யாமல்தான் முதல் விசாரணையில் ஆவணம் பழுதடைந்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் ஆமாம். வரிவிதிப்பு நோட் புத்தகத்திலிருந்து கணினிக்கு எந்த வருடம் மாற்றப்பட்டது என்றால் 2015-2016 ல் ஆகும்.

3) நான் கொண்டுவந்துள்ள சா.சா.ஆ.1 தீர்வை ரசீதுகளில் 23.01.2017 தேதியில் போடப்பட்ட ரசீதுகளில் முதல் ரசீது கணினி மயமாக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வரிவிதிப்பு யார் பெயரிலும் இல்லை என்றால் சரிதான். அதற்கு பிந்தைய ரசீதுகளில் பரமசிவன் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் பரமசிவன் பெயர் சேர்க்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். முந்தைய எழுத்துபூர்வமான வரிவிதிப்பு பதிவேட்டில் பரமசிவன் கிடையாது என்றால் ஆவணங்களை தேடி பார்த்துதான் சொல்லமுடியும்.

4) வாதிக்கு உதவி செய்யவேண்டும் என்ற காரணத்தினால் மேற்படி ஆவணங்கள் பழுதடைந்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2016 ஆம் ஆண்டு கணினி மயமாக்கும்போது கதவு எண்.143 ஜி-க்கு பரமசிவன் பெயர் கிடையாது என்றும், அதன் காரணமாகத்தான் முதல் ரசீதில் 23.01.2017 தேதியில் எந்த பெயரும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. கூட்டு குடும்பமாக இருந்தால் வரிவிதிப்பு பதிவேட்டில் அவர்களில் ஒருவர் பெயர் மட்டும் போடும் வழக்கம் உண்டா என்றால் குடும்ப உறுப்பினரின் வேண்டுகோளின்படி ஒருவர் பெயர் பதிவேட்டில் சேர்க்கப்படும்.

5) நான் கட்டிட வரைபட அனுமதி நடவடிக்கைகள் சம்பந்தமாக சாட்சியம் அளிக்கக்கூடிய நபர் இல்லை என்றால் சரியல்ல. 2004-2005 ஆம் ஆண்டு கட்டிட வரைபட அனுமதி நடவடிக்கைகள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். அது முறையாக வழங்கப்பட்ட நடவடிக்கையா, அனுமதியா என்பதும் ஒளிநகல் என்பதால் என்னால் முழுமையாக சொல்லமுடியாது என்றால் சரிதான். சம்பந்தப்பட்ட காலத்தில் உள்ள அதிகாரியை விசாரித்தால் கட்டிட வரைபட அனுமதி நடவடிக்கை சம்பந்தப்பட்ட உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் சாட்சியமளித்த கட்டிட வரைபட அனுமதியின் அடிப்படையில் வரைபடத்தை குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கட்டிடம் கட்டப்பட்டதா என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கதவு எண்.143 ஜி கட்டிடத்தின்

எல்கைகள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது கீழ்தளமா, மேல்தளமா, வீடா, கடையா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை - இல்லை.

Sd/-மகாதேவன்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

SARANYA G V

Uploaded on 07.09.2026
Digitally signed by SARANYA G V
Date: 2026.09.07 17:10:15 +0530

கூ.மா.உ.நீ.,

அம்பாசமுத்திரம்.